செய்தி வெளியீடு எண்: 811 நாள்:29.10.2020

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், நந்தனத்தில் 73 கோடியே 17 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 4 கோடியே 7 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இராஜபாளையம் மற்றும் பழனியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள 3 மின்தூக்கிகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 7.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு வருகை புரியும் வணிகர்களுக்கு கூடுதல் வசதிகளை செய்திடும் வகையிலும், பணியாளர்கள் பணிபுரிவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும், அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, சென்னை நகரில் வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த இரண்டு வணிகவரி அலுவலகங்கள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னை, வேப்பேரியில் கட்டப்பட்ட வடசென்னை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.11.2019 அன்று திறந்து வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், நந்தனத்தில், 23,360 சதுர மீட்டர் பரப்பளவில், 73 கோடியே 17 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய கட்டடமானது தரை மற்றும் 7 தளங்களுடன், 60 வணிகவரி அலுவலகங்கள் மற்றும் 7 பதிவுத் துறை அலுவலகங்களை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளது. மேலும், இக்கட்டடம், மின்தூக்கிகள், ஜெனரேட்டர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, கூட்ட அரங்கு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், விருதுநகர் மாவட்டம் – இராஜபாளையத்தில் 1 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்; திண்டுக்கல் மாவட்டம் – பழனியில் 1 கோடியே 53 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்; மதுரை, ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 3 மின்தூக்கிகள்;

என மொத்தம் 77 கோடியே 24 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வணிகவரி மற்றும் பதிவுத்துறை கட்டடங்கள் மற்றும் மின்தூக்கிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., வணிகவரி ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு.எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப., பதிவுத் துறை தலைவர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**